DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024
Prosecution Witness - P.W. 11

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பெமிலா |
| Father's Name | : | D.ஜோசப் |
| Village | : | பேச்சிப்பாறை |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | தலைமைக் காவலர் |
| Age | : | 42 |
| Date | : | 26.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

26.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குலசேகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். 13.01.2024 அன்று குலசேகர காவல் நிலைய குற்ற எண். 3/2024 பிரிவு 294(b), 323, 324, 506(ii) IPC @ 294(b)302 Ipc வழக்கில் கொலையுண்டு இறந்து போன முத்துபிள்ளை என்பவரின் உடல் மீதான பிரேத பாதுகாப்பு அலுவலுக்காக கடவுச்சீட்டு பெற்று ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு 11.30 மணிக்கு சென்று, சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த முத்துபிள்ளை என்பவரின் பிரேதத்தை பெற்று

பாதுகாப்பு அலுவல் செய்தேன். பின்னர் ஆய்வாளர் என்னை சவக்கிடங்கில் வைத்து 11.30 மணிக்கு பிரேத விசாரணை முடித்து, பின்னர் மருத்துவரால் 2.20 முதல் 3.20 மணிவரை பிரேத பரிசோதனை செய்து முடிக்கப்பட்டு, பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைத்தேன். பின்னர் 09.02.2024 அன்று குற்றவியல் நடுவர் எண். 2, பத்மநாபபுரம் அவர்களின் உத்தரவு பெற்று இறந்துபோன முத்துபிள்ளை என்பவரின் உடல் உள்ளுறுப்புகளை திருநெல்வேலி ராசாயன தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்தேன். அதற்கு ரசீது தந்தார்கள். அதை ஆசாா ிபள்ளம் மருத்துவமனையில்  ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

இந்த வழக்கில் பணியாற்றுவதற்கு எத்தனை முறை கடவுச்சீட்டு பெற்றேன் என்றால் ஒரு முறைதான் பெற்றேன். 09.02.2024 குற்றவியல் நடுவர் எண். 2, பத்மநாபபுரம் நீதிமன்றத்திலிருந்து உத்தரவு பெற்று திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு உடல் உள்ளுறுப்புகளை கொண்டு சென்று கொடுப்பதற்கு கடவு சீட்டு பெற்றேனா என்றால் பெற்றேன். இந்த இரண்டு கடவுச்சீட்டுகளையும் என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது அவர்களிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். இறந்துபோன முத்துபிள்ளையின் பிரேத விசாரணை எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது என்றால் 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு 9 மணிக்கு பிரேத விசாரணை ஆரம்பித்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட சடலத்தை

பாதுகாப்பதற்கு தலைமை காவலர் பதவியில் உள்ள ஒரு நபரை அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரிக்கு அவர்தான் சடலத்தை அடையாளம் காண்பித்து பிரேத விசாரணை நடக்கும் என்றால் சரிதான். நான் 11.30 மணிக்கு ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு செல்லும் வரையில் பிரேதத்தை பாதுகாக்க யாரும் இல்லை என்றால் சரியல்ல, நான் 9 மணிக்கே மருத்துவமனைக்கு சென்று விட்டேன். அவ்வாறு 9 மணிக்கு மருத்துவமனை செல்வதற்கு எனக்கு யார் உத்தரவிட்டு கடவு சீட்டு தந்ததது என்றால் நிலைய எழுத்தர் கொடுத்தார். 11.01.2024 ஆம் தேதி 11.30 மணிக்கு கடவுச்சீட்டு பெற்று ஆசாரிபள்ளம் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பெற்று பிரேதத்திற்கு காவலாக இருந்தேன் என சொல்வது தவறு என்றால் நான் 9 மணிக்கே ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அதனால் 11.30 மணிக்கு கடவுச்சீட்டு பெற்றதாக நான் சொல்லியிருந்தால் அது தவறு. குற்றவியல் நடுவர் எண். 2, பத்மநாபபுரம் நீதிமன்றத்திலிருந்து உத்தரவு நான் பெற்றேனா என்றால் காவல் நிலையத்திலிருந்து உத்தரவின் நகலை கொடுத்தார்கள். அதன் பிறகு நான் சென்றேன். நான் அந்த உத்தரவை நீதிமன்றத்திலிருந்து பெற்றதாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் ஆமாம், அது தவறு. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக யார் என்னை விசாரித்தார்கள், எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் விசாரித்தார், 09.02.2024 அன்று விசாரித்தார், நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. காலையா, மாலையா, மதியமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இருட்டிய பிறகு விசாரித்தார்களா அல்லது இருட்டுவதற்கு முன்பு

விசாரித்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. உடல் உள்ளுறுப்புகளை கொண்டு போவதற்கு நீதிமன்ற உத்தரவையும், அதற்கான கடவுசீட்டையும் நான் காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு பெற்றேன். என்றால் காலை 8 மணிக்கு பெற்றேன். திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்தில் உள்ளுறுப்புகளை கொடுத்தபோது கடவுச்சீட்டில் மேற்குறிப்பு செய்து கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அது எத்தனை மணிக்கு கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அங்கிருந்து நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக ஆய்வாளர் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால் ஒரு முறை விசாரித்தார். நான் முறையாக நான் சொல்லும் பணிகளுக்கு பயன்படுத்தப்படவில்லை என்றாலும் அவ்வாறு பயன்படுத்தப்பட்டதாக ஆதாரங்களை உருவாக்கி அதற்கேற்ப நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன என்ன செய்தேன் என நிரூபிப்பதற்கு எனக்கு வழங்கப்பட்டதாக சொல்லும் கடவுச்சீட்டு முக்கியமான ஆதாரம் என்றால் சரிதான்.